OS.No. 54/2015

Dated : 02.01.2024

Time: 11.25 a.m to 11.45 a.m

P.W-1 சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி சார்பாக குறுக்கு விசாரணை தொடர்ச்சி

குறுக்கு விசாரணை

8) தாவா சொத்தில் 2 கிணறும், ஒரு மின்இணைப்பும் உள்ளது. அதன் எண் தெரியாது. எனக்கு எழுதி கொடுத்தாக சொல்லும் பிவாசாஆ.16 உயிலில் மேற்படி மின்இணைப்பு எண். 163 என செல்லப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி துரைசாமிக்கும் அவருடைய தகப்பனார் பெருமாளுக்கும் பாத்தியப்பட்ட சொத்துக்களில் பாதி அளவில் தான் பிவாசாஆ.16 ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதே போல் அதில் கண்டுள்ள அணைத்து சர்வே எண் சொத்துக்களிலும் பாதி தான் உயில் எழுதப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9) தாவா சொத்துக்கள் அணைத்துமே ஆரம்பத்தில் கோவிந்தனுக்கு பாத்தியப்பட்டது என்றால் அது தவறு. அவை அணைத்தும் எனக்கு பாத்தியப்பட்டது. அதற்கான ஆவணத்தை கொடுத்துள்ளேன். மேற்படி தாவா சொத்துக்கள் அணைத்தும் கோவிந்தனுக்குதான் பாத்தியப்பட்டது எனவே எனக்கு பாத்தியப்பட்டதாக சொல்வதும் அதற்கான ஆவணங்கள் உள்ளதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. மேற்படி கோவிந்தன் இறந்த பிறகு அவரது இரண்டு மகன்கள் முத்தான் (எ) முத்துசாமி, பெருமாள் ஆகியோருக்குள் தாவா சொத்து குறித்து அவர்கள் இறக்கும் வரை எவ்வித பாகமும் செய்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல.

10) மேற்படி இருவருக்குள் பாகம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பாகம் ஏற்பட்டது ஆனால் பதிவு செய்யப்பட்டதாக ஞாபகம் இல்லை. அது எந்த ஆண்டு என்று தெரியாது. மேலும் அந்த பாகத்தை யார் யாருக்கு எவ்வளவு சொத்து, எந்த சர்வே எண்ணில் ஒதுக்கப்பட்டது என்பது எனக்கு தெரியாது. மேற்படி எவ்வித பாகமும் அவர்களுக்குள் ஏற்படவில்லை என்றும் வழக்கிற்காக நான் பாகம் ஏற்பட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் தனிப்பட்ட பாகதாரர்கள் பெயரில் தனியாக

வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டதாக எவ்வித ஆவணமும் நான் முன்நிறுத்தவில்லை என்றால் சரியல்ல. மேலும் தாவா சொத்தில் உள்ள தார்சு வீட்டின் மின் இணைப்பு எண் தெரியாது. அது எனக்கு பாத்தியப்பட்டது.

11) மேற்படி பிவாசாஆ.16 ல் மிண் இணைப்பில் பாதி பாகம்தான் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பெருமாளின் ஒரே வாரிசு துரைசாமி என்றால் சரிதான். என் மாமனார் முத்தான் (எ) முத்துசாமிக்கு வாதி கோவிந்தன், 1ம் பிரதிவாதி அய்யம்பெருமாள் மற்றும் 2 பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். அந்த பெண் பிள்ளைகள் இருவருக்கும் 60 ஆண்டுகளுக்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது. அவர்களுக்கு என் மாமனார், வாதி, துரைசாமி ஆகியோர் செலவு செய்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் அது தவறு. அதனால் அந்த பெண் பிள்ளைகள் இருவரும வாய் மொழியாக அந்த சொத்துக்களை என் கணவருக்கும், வாதிக்கும் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். மேலும் நான் சொல்லியுள்ள வாய்மொழி பாகம் என்ன தேதியில் யார் முன்பு ஏற்பட்டது என்ற விவரம் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

12) இன்றைய தேதிவரை தாவா சொத்துக்கள் வாதி மற்றும் துரைசாமிக்கும், 1ம் பிரதிவாதியின் கணவர் இடையே எவ்வித பாகமும் ஏற்படாமல் கூட்டாகத்தான் அனுபவத்தில் உள்ளது என்றால் அது தவறு. அதனால் தான் வருவாய் ஆவணங்களை நான் முன்நிறுத்தவில்லை என்றால் சரியல்ல. மேலும் அவ்வாறு இருவரும் கூட்டு அனுபவத்தில் இருப்பதை நானே என் எதிர்வழக்குரையில் ஒப்புகொண்டேன் என்றால் அது தவறு. ஏற்கனவே துரைசாமி தாவா சொத்து குறித்து அசல் வழக்கு 134/2004 என்ற வழக்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் காளிமுத்து வகையறாவுக்கு எதிராக தாக்கல் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கிலும் அவர் தாவா சொத்துக்களை பூர்வீக சொத்துக்கள் என்றுதான் சொல்லியுள்ளார் என்றால் அது தவறு.

13) மேற்படி தாவா சொத்துக்கள் வாதி, துரைசாமி மற்றும் என் கணவருக்கு இடையே பாகம் பிரியாத பூர்வீக சொத்துக்கள் என்பதால் பிவாசாஆ.16 ன் கீழ் நான் உயில் பெற்றதாக சொல்வது செல்லாது, வாதியை கட்டுப்படுத்தாது என்றால் அது

சரியல்ல. எனவே நான் 3ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த கிரய பத்திரம் செல்லாது, வாதியை கட்டுப்படுத்தாது என்றால் நான் அவருக்கு அது போல் சொத்து எழுதி தரவில்லை.

(தரப்பினர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/-K.Ananthan**
**Subordinate Judge,**
**Attur.**